# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

ஆணை எண். 143/மா/2018
நாள் : 24/10/2018

**22.06.2018 நாளிட்ட தினமலர் நாளிதழ் செய்தி** – முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது.

**மண்டல அலுவலர்,**
**மண்டலம் – 14, பெருங்குடி மண்டலம்,**
**சென்னை மாநகராட்சி.** – எதிர் மனுதாரர்

சென்னை மாநகராட்சி, பள்ளிக்கரணை, "சதுப்பு நிலத்தில் குவியும் பிளாஸ்டிக் கழிவுகள் – பறவைகள் உயிருக்கு ஆபத்து ஏற்படும் அபாயம் " எனத் தலைப்பிட்டு 22.06.2018 நாளிட்ட தினமலர் நாளிதழில் செய்தி வெளியாகியிருந்தது. மேற்குறிப்பிட்ட செய்தி குறித்து நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, இம்முறைமன்ற நடுவம் 143/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்து, 14–வது மண்டல அலுவலரின் அறிக்கை பெறப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை மாநகராட்சி, பள்ளிக்கரணை, "சதுப்பு நிலத்தில் குவியும் பிளாஸ்டிக் கழிவுகள் – பறவைகள் உயிருக்கு ஆபத்து ஏற்படும் அபாயம் " எனத் தலைப்பிட்டு 22.06.2018 நாளிட்ட தினமலர் நாளிதழில் வெளியான செய்தி குறித்து சென்னை மாநகராட்சி 14வது மண்டல அலுவலர் கீழ்க்காணும் அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்.

2. 22.06.2018 நாளிட்ட பத்திரிக்கையில் மேற்குறிப்பிட்ட செய்தியுடன் வெளியான புகைப்படம் தாம்பரம் – வேளச்சேரி சாலையை ஒட்டிய மயிலை பாலாஜி நகர் 3–வது பிளாக் பகுதிக்கு எதிரே அமைந்துள்ள சதுப்புநிலத்துடன் இணைக்கும் சிறுபாலத்தின் பகுதியாகும் என மேற்குறிப்பிட்ட அறிக்கையில், தெரிவிக்கப்பட்டுள்ளது. மடிப்பாக்கம் பகுதியிலிருந்து வெளியேறும் மழைநீர் மயிலை பாலாஜி நகர் பகுதியிலுள்ள திறந்தவெளி கால்வாய் வழியாக சதுப்பு நிலத்தைச் சென்றடையும் என்றும் மயிலை பாலாஜி நகர் பகுதியானது நான்கு பிளாக்குகளை கொண்ட குடிசைப் பகுதி என்றும் இப்பகுதியில் சுமார் எட்டாயிரம் மக்கள் வசிக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் உள்ள திறந்தவெளி கால்வாயில் பிளாஸ்டிக் கழிவுகள் கலப்பதை தடுக்கும் பொருட்டு இக்கால்வாயின் மேற்குப் பகுதியில் சென்னை மாநகராட்சி மழைநீர் வடிகால் துறை மூலமாக தடுப்பு வேலி அமைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. மேற்குறிப்பிட்ட சதுப்புநிலத்தின் மேற்குப்பகுதி தாம்பரம் – வேளச்சேரி பிரதான சாலையும் சதுப்பு நிலத்தின் நடுவே துரைப்பாக்கம் ரேடியல் சாலையும் அமைந்துள்ளன என்றும் போக்குவரத்து மிகுந்த இச்சாலையில் அச்சாலை வழியே செல்லும் பொதுமக்கள் சில நேரங்களில் குப்பைக் கழிவுகளை சதுப்பு நிலத்தை நோக்கி வீசி எறிந்து விட்டுசெல்கின்றனர் என்றும் இதனைத் தடுக்கும் பொருட்டு குப்பைகள் மற்றும் கழிவுகளை சதுப்புநிலத்தில் வீசவேண்டாம் என்று சாலையை ஒட்டி எச்சரிக்கை பலகைகள் சென்னை மாநகராட்சி-14–வது மண்டலம் மூலமாக வைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4\. 22.06.2018 அன்று தினமலர் நாளிதழில் செய்தி வெளியானபின்பு அப்பகுதியில் இருந்த கழிவுகள் அனைத்தும் அகற்றப்பட்டுவிட்டன என்றும், பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் குப்பைகள் சதுப்பு நிலத்தில் சேருவதை தடுக்கும் பொருட்டு மயிலை பாலாஜி நகர் சிறுபாலத்தின் குறுக்கே தடுப்பு வேலி அமைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் சேரும் குப்பை மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளை தினமும் துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டு அகற்றப்படுவதுடன் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5\. பள்ளிக்கரணை சதுப்புநிலம் பலவகைப் பறவைகளுக்கு சரணாலயமாக அமைந்துள்ளது. அச்சதுப்புநிலத்தில் குப்பைகள் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகள் சேராவண்ணம் கண்காணிப்பது சம்பந்தப்பட்ட மண்டல அலுவலரின் முக்கிய பொறுப்பாகும். தினமலர் நாளிதழில் செய்தி வெளியானபின்பே மண்டல அலுவலர் கழிவுகளை அகற்றும் நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளார். பறந்து திரியும் பறவைகளுக்கு இயற்கை அன்னை வழங்கிய இச்சரணாலயத்தை சுகாதார சீர்கேடின்றியும், பலவகைப் பறவைகளும் வந்து செல்லும் வகையில் பராமரிப்பது அவசியம் என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. எனவே, சென்னை மாநகராட்சி குறிப்பாக 14–வது மண்டலத்தில் அமைந்துள்ள நீர்நிலைகளில் குப்பைகள் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகள் சேராவண்ணம் தினமும் கண்காணித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென சம்பந்தப்பட்ட மண்டல அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்தி ஆணையிடுகிறது.

2018– ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள், 24–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. மாநகராட்சி ஆணையர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் கட்டிடம்,
   சென்னை – 600 003.

2. மண்டல அலுவலர்,
   மண்டலம் – 14,
   பெருங்குடி மண்டலம்,
   6/64, புழுதிவாக்கம் பிரதான சாலை,
   சென்னை மாநகராட்சி,
   சென்னை – 600 091..

3. ஆசிரியர்,
   தினமலர், சென்னை பதிப்பகம்,
   ஒயிட்ஸ் சாலை, சென்னை – 600 014.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்